***கவனிக்க.*** *- 2019.04.05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2119 - 2019 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2019.04.12**

*2119 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 96 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 97 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, மே 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 18ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


95- B 81512 - 353 (2019/04)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

இணைப்பு 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ மாகாணங்களுக்கிடைப்பட்ட பிரதிக் காணி ஆணையாளர் மாதுவகே யுரேஷ் நிஷாந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைக் சட்டதின் 19(4) ஆவது உட்பிரிவின் கீழ், அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.08.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்தியம/ கலே/722 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பம்பரகஸ்வெவ, ராலலாரொடவெவ, பலுகஹமுல மூகலான எனும் முகவரியில் வசிக்கும் அருமப்பெரும ஆரச்சிகே சாதிரிஸ் அப்புஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாத்தளை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் LDO /மத்தியம/கலே/722/ 1442/95 ஆம் இலக்கத்தின்கீழ் 1995/11/10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.05.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மாத்தளை நிருவாக மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவின் கந்தபல்ல பத்துவே/கோறளையில் உள்ள மொரகொல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ராலலாரொடவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இ.கி.வ. 326/3 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 501(கொட) ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.368 ஹெக்டேயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு "பலுகஹமுல மூகலான"

வடக்கு:- காணித்துண்டு இல. 504;
கிழக்கு:- காணித்துண்டு இல. 503, 502;
தெற்கு:- காணித்துண்டு இல. 493;
மேற்கு :- காணித்துண்டு இல. 500.

எம்.யூ. நிஷாந்த,
பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர்,
.

பிரதேச செயலகம்,
கலேவல,
2018, திசெம்பர் 31.

4- 221/1

இணைப்பு 9

எனது இல. 8/3/2/மா/பி.செ/954
பிரதேச செயலகம், மாத்தளை,
2018.12.31.

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாணத்தின் மாத்தளை நிருவாக மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை பிரதேச செயலாளர் கலஹே பாண்டி கோராளகே லங்கா பிரியானி மதுவந்தி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைக் சட்டத்தின் 19(4)ஆவது உபபிரிவின் கீழ், அதி மேதகு சனாதிபதி அவர்களினால் 1982.08.09 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் மாத்தளை/பிரா/ 954 ஆம் இலக்க வழங்கற் பத்திரத்தின் உரித்தாளரான இல.37, பலாபத்வல, மாதளேவத்த எனும் முகவரியில் வசிக்கும் திருமதி மெட்டிஹக்கே கெதர லைசா என்பவருக்கு கையளிக்கப்பட்ட, மாத்தளை மாவட்டக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் மா/30/236 ஆம் இலக்கத்தின்கீழ் 1983.07.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.05.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மாத்தளை நிருவாக மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கம்பஹசிய பத்துவில் இம்புலந்தண்ட , உடுகம, தொரகும்புர கிராம அலுவலர் பிரிவில் துனுகேவத்த, கனன்கமுவ, உடுகம, தொரகும்புர கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை சிரேஷ்ட நிலஅளவையாளர் பொறுப்பில் இருக்கின்ற, நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்கள பத்திர இலக்கம் /வரைபட இலக்கம் பி.பி.ஏ. 1968 கொண்ட துண்டு பிரிக்கும் வரைபடத்தில் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல.பீ.பீ.ஏ 1968 கொண்ட கோட்டுப் படத்தில் 37ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ள 02 ஏக்கர், 03 றூட், 14 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட அரச காணி . மாதளேவத்த குடியேற்றம் எனும் காணித்துண்டின் எல்லைகள்.-

வடக்கு:- காணித்துண்டு இல. 31;
கிழக்கு:- காணித்துண்டு இல.41( வீதி) ;
தெற்கு:- காணித்துண்டு இல. 41( வீதி);
மேற்கு :- தனியார் காணி.

கே.பி.கே.எல்.பீ. மதுவந்தி,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மாத்தளை.
2018, திசெம்பர் 31.

4- 221/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/59807.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NCP/ PLC/ LO9/23/4.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பொலநறுவை மாவட்டம், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.167, பொத்குல் பெதெச கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுகுல் பெதெச, தீரவகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் TR இல. F.C.P.Po 160 இணைப்பு இல. 185 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2798எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0. 4047 ஹெக்டேயார் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை சங்கத்தின் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு பௌத்த சங்கத்தின் பொதுக்குழு விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : F.T.P. 09 இன் காணித்துண்டு இல. 1687 மற்றும் F.C.P. Po 160 இன் காணித்துண்டு இல. 1795 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 2795 மற்றும் 2797 ;
தெற்கு : காணித்துண்டு இல. 2799;
மேற்கு : காணித்துண்டு இல. 2799 மற்றும் F.T.P. 09 இன் காணித்துண்டு இல. 1687.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.** -முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுமதி வழங்கிய 2019.03.16 ஆந் திகதியிலிருந்து );

**வருடாந்தக் குத்தகை.**-பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2 % வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

தவணைப்பணம் - இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள /கட்டப்படவிருக்கும் கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து குறைந்தது 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும் கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ.கே.என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 12.

4-731

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.